Regional Bulletin

Puducherry

31.07.2025 18.10

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 31.07.2025 - வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தில் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக, இன்று எதிர் கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன.

பிரதமரின் கிருஷி சம்பதா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, 6 ஆயிரத்து 520 கோடி ரூபாயாக உயர்த்தும் முடிவிற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2008ஆம் ஆண்டு மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து, சிறப்பு NIA நீதிமன்றம் இன்று வெளியிட்டுள்ள தீர்ப்பை, பிஜேபி வரவேற்றுள்ளது.

புதுச்சேரியில், சாகித்ய அகாடமியும், தனியார் கலை-அறிவியல் கல்லூரியும் இணைந்து, சிறார் இலக்கியம் குறித்து கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

*நாடாளுமன்றம் (16)*

நாடாளுமன்றத்தில் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக, இன்று எதிர் கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை, முதலில் இரு முறையும், மாலை 4 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவை, முதலில் 3 முறையும், மாலை 4.30 மணிக்கு மேல், நாளைய தினத்திற்கும் ஒத்தி வைக்கப் பட்டது. பீகார் மாநிலத்திற்கான சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து விவாதம் தேவை என, எதிர் கட்சிகள் முக்கியமாக வலியுறுத்தின. ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து, விவாதம் கோரிய எதிர்க் கட்சிகள், மாநிலங்களவையில் இடம் பெற்ற விவாதங்களுக்கு நேற்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பதிலளிக்கையில், அதைக் கேட்காமல் வெளி நடப்பு செய்துவிட்டதாக அவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா குற்றம் சாட்டினார். விவாதங்களுக்கு எந்த அமைச்சர் பதிலளிப்பார் என்பதை தீர்மானிப்பது அரசின் உரிமை என்று, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், ஏற்கனவே தெளிவுப் படுத்தி விட்டதாக அவர் கூறினார்.

*செயற்கைக் கோள் – நாடாளுமன்றம் (13)*

நாசா – இஸ்ரோ கூட்டு முயற்சியான நிசார் புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோள், ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டதை, நாடாளுமன்ற இரு அவைகளும் பாராட்டி உள்ளன. நம்பகமான, திறன்மிகு விண்வெளி ஆராய்ச்சி நாடாக, இந்தியாவின் அந்தஸ்து உலகளவில் மேம்பட்டு வருவதை பிரதிபலிக்கும் வகையிலும், மனித குலத்தின் நன்மைக்காக அறிவியல் சமூகத்தினர் எட்டி வரும் சாதனைகளை கோடிட்டுக் காட்டும் வகையிலும், இந்த வெற்றி அமைந்து இருப்பதாக, இன்று, மக்களவையில், அவையின் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் கூறினார். மக்களவையில், சபாநாயகர் திரு. ஓம் பிர்லா பேசுகையில், பூமிப் பரப்பின் நில – நீர் சூழலை ஆராய்வதே நிசார் செயற்கைக் கோளின் முக்கிய

நோக்கம் என்றார். இஸ்ரோ விஞ்ஞானிகளின் எதிர்கால முயற்சிகளும், இதே போல வெற்றி பெற தாம் வாழ்த்துவதாக அவர் தெரிவித்தார்.

*மோடி தொலைபேசி (13)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் ஜாயேத் அல் – நஹ்யானை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இந்தியாவிற்கும் , ஐக்கிய அரபு எமிரேட்டுகளுக்கும் இடையிலான, விரிவான இரு தரப்பு கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில், இரு தலைவர்களும் பரஸ்பர உறுதிப்பாடு வெளியிட்டனர். பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பு நல்லமுறையில் முன்னேறி இருப்பதை இவர்கள் சுட்டிக் காட்டி, இரு நாட்டு மக்களின் பொதுவான நன்மைக்காக உறவுகள் மேலும் ஆழமாக வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். இந்தியாவின் வரலாற்றில் நீண்ட காலமாக பதவியில் உள்ள இரண்டாவது பிரதமராக மேம்பட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, ஷேக் அல்- நஹ்யான் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டதாகவும், பிரதமர் அலுவலகத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி உத்தம் சிங் (7)*

ஷாஹீத் உத்தம் சிங் தியாக தினமான இன்று அவருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, புகழஞ்சலி செலுத்தி உள்ளார். இந்தியாவின் அமரத் திருமகனாம் உத்தம் சிங்-இன் தேசப் பற்றும், துணிச்சலும், நாட்டு மக்கள் அனைவருக்கும் நிரந்தர உணர்வூக்கமாக திகழும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு காரணமான ஜெனரல் டயரை சுட்டுக் கொன்ற வழக்கில், உத்தம் சிங், 1940ஆம் ஆண்டு இதே நாள், லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.

*அமைச்சரவை -1(11)*

பிரதமரின் கிருஷி சம்பதா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, ஆயிரத்து 920 கோடி ரூபாய் கூடுதல் நிதியுடன் சேர்த்து, 6 ஆயிரத்து 520 கோடி ரூபாயாக உயர்த்துவதன் மூலம், இத்திட்டத்தை வலுப்படுத்தும் முடிவிற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில், இதை தெரிவித்தார். கிருஷி சம்பதா திட்டத்தின் பல்வேறு துணைத் திட்டங்கள் மூலம், 50 இடங்களில், பல்பொருள் உணவு கதிரூட்டப் பிரிவுகளையும், 100 இடங்களில் உணவு பரிசோதனைக் கூடங்களையும் அமைப்பதற்கான உதவிகள் இதில் அடங்கும் என அவர் கூறினார். மத்திய அமைச்சரவையின் முடிவுகள் குறித்து, கூடுதல் விவரங்கள்….

(வாய்ஸ்)

*அமைச்சரவை-2 (16)*

(வாய்ஸ்)

அடுத்த 4 ஆண்டுகளில், மொத்தம் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகத்தை வலுப்படுத்தும் வகையிலான மானியத் திட்டத்திற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மானிய உதவிகளின் அடிப்படையில், தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகம், வெளிச் சந்தையில் 20 ஆயிரம் கோடி ரூபாய் திரட்ட முடியும் என்றும், புதிய கூட்டுறவுத் திட்டங்கள் மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கு கடன் வழங்க இதனால் ஏதுவாகும் என்றும், அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், பீகார், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில், மொத்தம் 574 கிலோ மீட்டர் ரயில் பாதைகளை பல்தடப் பாதைகளாக மாற்றுவதற்கான 4 திட்டங்களுக்கும், பொருளாதார விவகாரங்கள் பற்றிய மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் 11 ஆயிரத்து 169 கோடி ரூபாய் செலவில்,

2028-29ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்பட உள்ள இத்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் மூலம், மொத்தம் 229 லட்சம் மனித – நாட்கள் அளவிற்கு நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும், மதிப்பிடப் பட்டுள்ளது.

*மாலேகான் வழக்கு -1 (15)*

2008ஆம் ஆண்டு மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து, சிறப்பு NIA நீதிமன்றம் இன்று வெளியிட்டுள்ள தீர்ப்பை, பிஜேபி வரவேற்றுள்ளது. அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு. ரவிசங்கர் பிரசாத், இன்று இது குறித்து, புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில், நாட்டில் காவித் தீவிரவாதம் இருப்பதாக, காங்கிரஸ் கட்டிய பொய்க் கதை, தற்போது குலைந்து விட்டதாகவும், இன்றைய தினம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்றும் கூறினார். இந்த வழக்கு முழுவதுமே ஓட்டு வங்கி நோக்கிலான, திட்டமிட்ட அரசியல் சதியின் ஒரு பகுதிதான் என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக, மாலேகான் வழக்கில், மும்பை NIA சிறப்பு நீதிமன்றம் இன்று வெளியிட்ட தீர்ப்பில், முன்னாள் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ப்ராக்யா சிங் தாக்கூர் உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைத்து 7 பேரும் விடுவிக்கப் பட்டனர். குற்றச்சாட்டை நிருபிக்க அரசுத் தரப்பினர் தவறி விட்டதாகவும், சந்தேகத்தின் பலன்களை பெறும் தகுதி, குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு உண்டு என்றும், நீதிமன்றம், தனது

*மாலேகான் வழக்கு - 2 (5)*

தீர்ப்பில் கூறியது. சட்டவிரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் விதிமுறைகள், இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றும் நீதிமன்றம் கூறியது.

மாலேகான் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை, காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க மகாராஷ்டிர அரசுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*ரங்கசாமி – உதவி (8)*

புதுச்சேரியில், பிள்ளையார் குப்பம் கந்தன் பேட் பகுதியில், அண்மையில், மின்சாரம் தாக்கி உயிரிழந்த கனகராஜ் என்பவரின் குடும்பத்தினருக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமான இழப்பீடாக, 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. லட்சுமி காந்தன், துறை இயக்குநர் திரு. இளங்கோவன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*கருத்தரங்கு (12)*

புதுச்சேரியில், சாகித்ய அகாடமியும், மணக்குள விநாயகர் கலை-அறிவியல் கல்லூரியும் இணைந்து, சிறார் இலக்கியமும் - சிறார் ஆளுமை வளர்ச்சியும் என்ற தலைப்பில், கருத்தரங்கு ஒன்றை நடத்தின. சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் திரு. பூபதி, கருத்தரங்கை தொடக்கி வைத்தார். எழுத்தாளர் ஆயிஷா நடராஜன் இக்கருத்தரங்கில் தலைமை உரை ஆற்றுகையில், மனித நேயம் மிக்க, சுய சிந்தனையுடன் கூடிய எதிர்காலத் தலைவர்களாக குழந்தைகளை உருவாக்க, சிறுவர் இலக்கியங்கள், விதையாக அமையும் என்றார். சிறுவர்களின் கற்பனை, பெரியவர்களுக்கு வராது என்பதால், சிறுவர்களின் கற்பனையை புறந்தள்ளக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார். பட்டம் வாங்கப் படிப்பு என்றால், வாழும் வழிமுறைகளை தெரிந்து கொள்ள வாசிப்பு அவசியம்

என்று, அவர் வலியுறுத்தினார். எழுத்தாளர் ஆயிஷா நடராஜன் உரையிலிருந்து ஒரு பகுதி....

(வாய்ஸ் – ஆயிஷா நடராஜன்)

*காரைக்கால் (11)*

மயிலாடுதுறையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் CSR நிதி மூலம், காரைக்காலில், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இலவச நீட் பயிற்சி வகுப்புகள் இன்று தொடங்கி உள்ளன. காரைக்கால் அன்னை தெரசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், இன்று காலை நடைபெற்ற விழாவில், மாவட்ட துணை ஆட்சியர் திரு. அர்ஜுன் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு, நீட் பயிற்சி வகுப்புகளை தொடக்கி வைத்தார். இதற்கென, 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள, ஸ்மார்ட் தொடுதிரைக் கரும்பலகையின் பயன்பாட்டையும் அவர் தொடக்கி வைத்தார். காரைக்காலில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 250 மாணவ – மாணவிகளுக்கு, இத்திட்டத்தின் கீழ், பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

*வானிலை (10)*

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும் – நாளையும், ஓரிரு இடங்களில், மணிக்கு 50 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்

பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில், 3 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட் (6)*

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே, லண்டனில் இன்று தொடங்கி உள்ள, 5-ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணியால், முதலில் ஆட பணிக்கப் பட்ட இந்திய அணி, பகல் உணவு இடைவேளை வரை, 2 விக்கெட் இழப்பிற்கு, 72 ரன் எடுத்து இருந்தது. இத்தொடரில் இதுவரை 4 போட்டிகள் முடிந்துள்ள நிலையில், இங்கிலாந்து அணி, 2-க்கு 1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*இராணுவம் ஓய்வு (10)*

இந்திய ராணுவத்தின் துணைத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி, இன்று பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயின்று, 1985ஆம் ஆண்டு டிசம்பரில், கர்வால் ரைஃபிள்ஸ் படைப்பிரிவில் சேர்ந்த அவர், தமது 39 ஆண்டு கால ராணுவப் பணியில், முக்கியமான பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். குறிப்பாக, நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைப்புற நிலவரங்களில், ஆழமான புரிதல் கொண்ட லெப்டினென்ட் ஜெனரல் ராஜா சுப்ரமணி, பாதுகாப்புப் படைகளின் ஆயத்த நிலை மற்றும் தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதில் கணிசமான பங்களித்தவர் என்று பாதுகாப்பு அமைச்சகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்றத்தில் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக, இன்று எதிர் கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன.

பிரதமரின் கிருஷி சம்பதா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, 6 ஆயிரத்து 520 கோடி ரூபாயாக உயர்த்தும் முடிவிற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2008ஆம் ஆண்டு மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து, சிறப்பு NIA நீதிமன்றம் இன்று வெளியிட்டுள்ள தீர்ப்பை, பிஜேபி வரவேற்றுள்ளது.

புதுச்சேரியில், சாகித்ய அகாடமியும், தனியார் கலை-அறிவியல் கல்லூரியும் இணைந்து, சிறார் இலக்கியம் குறித்து கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK